### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை

# 2026 தேர்தலில் திராவிட மாடல் ஆட்சி தொடர அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும்!

## திருப்பத்தூரில் நிர்வாகிகள் கூட்டத்தில் அமைச்சர் தங்கம் தென்னரசு பேச்சு!



சிவகங்கை. மே 23.

சிவகங்கை மாவட்ட கழகத்தின் சார்பில் திருப்பத்தூரில் உள்ள தனியார் மண்டபத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் அ. கணேசன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன் வரவேற்று பேசினார். கூட்டத்தில் கலந்து கொண்டு மண்டல பொறுப்பாளரும் நிதி அமைச்சருமான தங்கம் தென்னரசு பேசியதாவது.

கழகத் தலைவர் தளபதி அவர்களால் நான் மண்டல பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளேன். நமது நோக்கம் நடைபெற உள்ள 2026 சட்டமன்ற தேர்தலில் முழு அளவில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காகத்தான் ஆகும். இதில் சிவகங்கை மாவட்டம் எனக்கு ஒன்றும் புதிதானதல்ல. ஒன்றான முகவை மாவட்டமாக இருந்த பொழுது கழகத்தினை இப்பகுதியில் வளர்த்தவர்களான சிறுகதை மன்னர் அமைப்புச் செயலாளர் எஸ்.எஸ். தென்னரசு, பசும்பொன் தா.கிருட்டினன் எனது தந்தை வே.தங்கபாண்டியன் உட்பட பல்வேறு கழக முன்னோடிகள் இந்த இயக்கத்தினை இப்பகுதியில் மாவட்டத்தில் வளர்த்துள்ளார்கள்.

எனவே சிவகங்கை மாவட்டத்தில் நானும் இதில் பயிற்சி பெற்றவன். எனக்கு இந்த மாவட்டம் ஒன்றும் புதிதல்ல. மண்டல பொறுப்பாளர் என்ற முறையில் உங்களை சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இந்த இயக்கத்தில் உள்ளவர்கள் ஒரு வழியில் உறவுகளாக தெரிகிறார்கள். சிவகங்கை மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்றத் தொகுதியில் நாம் வெற்றி பெறுவது என்பது உறுதியான ஒன்றாகும் .ஆனால் அதற்கான பணிகளை நாம் விரைவாக ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.தலைமை கட்டளைக்கு கீழ்ப்படியும் மாவட்டங்களில் சிவகங்கை மாவட்டம் ஒன்றாகும். கடமை ,கண்ணியம் , கட்டுப்பாடு, என்ற நமது கொள்கையினை ஏற்று செயல்படும் மாவட்டம் ஆகும்.அத்தகைய மாவட்டத்தில்தான் இந்த கூட்டம் நடைபெறுகிறது.

2026 ஆம் ஆண்டு தேர்தல் மிகவும் முக்கியமானதாகும் . அரசியல் கட்சிகள் எந்த போர்வையில் வருகிறார்கள் என்பதை நாம் உணர்ந்து அதற்கு ஏற்ப திறமையாக செயல்பட வேண்டும். நம்முடைய கழக தலைவர் தளபதி அவர்களின் சாதனைகள் இந்தியாவில் முதல் மாநிலமாக தமிழகமும்,நம்பர் ஒன் முதல்வராக கழக தலைவர் தளபதி அவர்களும் விளங்கி வருகிறார்கள். ஒன்றிய அரசின் நெருக்கடிகள், நிதி நெருக்கடிகள் ,அரசியல் நெருக்கடிகள், இதற்கிடையில் தன்மான ஆட்சியினை தளபதி அவர்கள் நடத்தி வருகிறார் கள். மாநில உரிமைகளை மீட்பதற்காக போராடும் ஆட்சியாக தளபதி அவர்களின் ஆட்சி நடைபெற்று வருகிறது. இத்தகைய திராவிட மாடல் ஆட்சியை முறியடிப்பதற்காக இனப்பகைவர்கள் வருகிறார்கள். .அந்த பகைவர்களை நாம் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். நம்முடைய கழகத் தலைவர் முதல்வர் தளபதி அரசின் நான்கரை ஆண்டு சாதனைகள் தமிழகத்தில் உள்ள அனைத்து வீட்டின் ஒருவருக்கும் சென்று அடைந்துள்ளது. 2026 ஆண்டிலும் திராவிட மாடல் ஆட்சி தொடர வேண்டும். கழக தலைவர் தளபதி இரண்டாவது முறையாக முதல்வராக அமர வேண்டும் .தமிழக முதல்வர் அவர்கள் நம் மீது நம்பிக்கை வைத்துள்ளார்கள் . அதை நாம் நிறைவேற்ற வேண்டும். கடந்த நாலரை ஆண்டுகளில் கட்சி நிர்வாகிகள் சிலருக்கு பல்வேறு ஆதங்கங்கள்உள்ளது .

அதை நான் . நன்றாக அறிவேன் .அதனையும் நாம் போக்கிட வேண்டும். தேர்தலில் பணியாற்ற கூடுதல் பலமாக நாம் வாக்குச்சாவடியை அடிப்படையாக்க் கொண்டு செயல்பட வேண்டும் .பி.எல்.ஏ. பி.எல்.ஏ2,பி.எல்.சி. ஆகிய பூத் கமிட்டியில் தகவல் தொழில் நுட்ப அணி சார்ந்த ஒருவர் கட்டாயம் நியமிக்கப்பட வேண்டும் .

காரணம் சமூக வலைதளங்களில் நமது கழக தலைவர் ஆட்சி குறித்தும்கழகம் குறித்து பொய்யான வதந்திகள் பரப்பப்படுகின்றது . அதற்கு நாம் உடனடியாக பதில் கூற வேண்டும் .எனவே கிளை கழகங்கள், பூத் கமிட்டிகள் , சார்பு அணியினர் இணைந்து இந்த பணியில் செயல்பட வேண்டும். சார் பு அணிகள், பூத் கமிட்டி ,கிளை கழகம் இணைந்து பணியாற்றினால் நாம் தேர்தலில் வெற்றியை எளிதாக பெற்றிட முடியும் .ஜூன் ஒன்று மதுரையில் நடைபெறும் பொதுக்குழு கூட்டம் முடிவடைந்த உடன் கட்சி உறுப்பினர் சேர்க்கை நடைபெற உள்ளது.

அதில் மாவட்டத்தில் அதிக அளவில் உறுப்பினர்களை சேர்க்க வேண்டும். .சென்ற சட்டமன்ற தேர்தலில் 4 தொகுதிகளில் நாம் 3 இடங்களில் வெற்றி பெற்றோம் .2026 தேர்தலில் நான்கு சட்டமன்ற தொகுதியிலும் நமது வேட்பாளர்கள் வெற்றி பெற வேண்டும். அந்த வெற்றிவேட்பாளர்கள் கழக தலைவர் தளபதி அவர்களிடம் வாழ்த்து பெற வைக்க வேண்டும் .2026 தேர்தல் தமிழகத்தின் தலைவிதியினை நிர்ணயிக்கும் தேர்தலாக அமைந்துள்ளது. தென்பாண்டி மண்டலத்தில் உள்ள அனைத்து தொகுதிகளிலும் கழகம் கூட்டணி வேட்பாளர்கள் வெற்றி பெறுவதற்கான பணியை நாம் இப்பொழுது முதல் செயல்பட வேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கான நம்பிக்கை எனக்கு உள்ளது .அதற்கு நீங்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் .

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு. பேசினார்.

இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கே ஆர். பெரியகருப்பன் பேசியதாவது. நம்முடைய கழகமானது பல்வேறு மக்கள் நல சாதனைகளை தொடர்ந்து படைத்து வந்துள்ளது . பேரறிஞர் அண்ணா தலைவர் கலைஞர் அவர்கள் வழியில் கழக தலைவர் தளபதிஅவர்கள் தலைமையிலான நான்கரை ஆண்டு ஆட்சியில் பல்வேறு எண்ணற்ற சாதனைகளை படைத்துள்ளார்கள் . வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் கழக தலைவர் தளபதி அவர்கள் தலைமையிலான ஆட்சி தொடர வேண்டும் . இரண்டாம் முறையாக தளபதி அவர்கள் முதல் வராக வர வேண்டும். இந்த அரசு தொடர வேண்டும் என்று பொதுமக்கள் விரும்புகிறார்கள். அதற்கு ஏற்ப நாம் நமது பணிகளை செய்திட வேண்டும் .234 தொகுதிகளில் 200க்கும் மேற்பட்ட தொகுதியில் நாம் வெற்றி பெற வேண்டும்.

கழக தலைவர் கலைஞர் அவர்கள் அவர்கள் 184 தொகுதிகளில் வெற்றி பெற்று கழக ஆட்சி அமைத்தார் . அதைவிட கூடுதலாக நாம்200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெறவேண்டும் . வலுவான ,வலிமையான ஆட்சியை அமைத்திட வேண்டும் .2024 பாராளுமன்ற தேர்தலின் போதே பொழுதே சட்டமன்றத் தேர்தல் பணியை தொடங்கி விட்டோம் .அந்த பணி தொய்வின்றி தொடர வேண்டும். தலைமைக் கழகம் என்ன கூறுகிறதோ அதை மாவட்ட கழகம் உங்களுக்கு தெரிவிக்கும் .நகர் கழகம் முதல் கிளைக் கழகம், வட்டக் கழக நிர்வாகிகள் உடனடியாக முடித்திட வேண்டும்.

தலைமைக்கழகம் கேட்பதை நாம் உடனடியாக பதில் கூற வேண்டும் . அவர்கள் கேட்கும் விவரங்களை உடனடியாக தந்திட வேண்டும். கழக நிகழ்ச்சி பணிகளை அன்றாடம் முடித்து விட்டால் எளிதாக நமது பணி அமைந்துவிடும் . சிவகங்கை மாவட்டத்தில் இந்த முறை நான்கு தொகுதியில் நாம் வெற்றி பெற வேண்டும். சிவகங்கை மாவட்டத்தில் கழகம் வலுவான வலிமையான நிலைமையில் உள்ளது. கூட்டணி பற்றி நாம் கவலைப்பட வேண்டாம் .கழகத் தலைவர் தளபதி அவர்கள் தலைமையில் வலுவான ,வலிமையான கொள்கை சார்ந்த கூட்டணி அமைந்துள்ளது. நாம் நமது அரசின் சாதனைகளை தெருமுனை பிரச்சாரங்களாக மக்களிடம் எடுத்துக் கூற வேண்டும். அதற்காக நாம் கடுமையாக உழைக்க வேண்டும் . இவ்வாறு நாம் பணியாற்றினால் எளிதான முறையில் வெற்றி பெற முடியும்.. பி.எல்.ஏ,பி.எல்.ஏ2 பி.எல்.சி ஆகிய பூத் கமிட்டிகளில் நன்றாக பணிபூரிபவர்களை நியமிக்க வேண்டும் .இவ்வாறு நியமித்து நாம் ஒன்றாக பணியாற்றினாலே நமது வெற்றி எளிமையாக அமையும்.குறைகள் நிறைகள் இருந்தாலும் அவற்றை தலைமைக் கழகம் சரிசெய்து தருவார்கள். எனவே வெற்றி ஒன்றையே இலக்காக கொண்டு நாம் தேர்தல் பணியாற்ற வேண்டும். நான்கு தொகுதியில் வெற்றி வேட்பாளர்களை கழக தலைவர் முதல்வர் தளபதி அவர்களிடம் அழைத்து சென்று வாழ்த்து பெற்றிட வேண்டும். இந்த முறை நான்கு சட்டமன்ற தொகுதியில் வெற்றி பெறுவோம் என்ற உறுதியினை மண்டல பொறுப்பாளராகிய அமைச்சர் தங்கம் தங்கம் தென்னரசு அவர்களிடம் நான் உறுதியாக தெரிவித்துக் கொள்கிறேன் .

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசினார்.

இந்த கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ . சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர்கள் முன்னாள் அமைச்சர் டாக்டர் எஸ். சுந்தர்ராஜ், முன்னாள் எம்.எல்.ஏ . கே . முருகவேல், க.சண்முகம், சண்முகம் , பி.கே.என் போஸ் ,மாவட்ட பொருளாளர் சுப. .துரைராஜ் ,மாநில மாணவரணி இணைச் செயலாளர்கள் பூரண சங்கீதா, ராமகிருஷ்ணன், இலக்குவன், மாநில கொள்கை பரப்பு இணைச் செயலாளர் வேங்கைப்பிரியா , மாநில ஆதிராவிடர் குழு இணை செயலாளர் எஸ் .மாரியப்பன் கென்னடி ,முன்னாள் எம்.எல்.ஏ. சுப.மதியரசன் செயற்குழு உறுப்பினர்கள் காரைக்குடி மாநகர மேயர் எஸ். முத்துத்துரை , அ.முகம்மது, பொதுக்குழு உறுப்பினர்கள். பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, கரு. அசோகன், எம். சோமசுந்தரம், த.உதயகுமார் ,அம்பலமுத்து, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், நகர் கழக செயலாளர்கள் சி.எம்.துரை. ஆனந்த், க. பொன்னுச்சாமி, பெரி.பாலா, துணை மேயர் காரைக்குடி மாநகர செயலாளர் நா.குணசேகரன் மற்றும் ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன், விழுப்புரம் நகரம், 38 வது வார்டு, ஹவுசிங் போர்டு பகுதியில், இரண்டு புதிய மின்மாற்றினை இயக்கி வைத்தார். உடன் நகர்மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, மேற்பார்வை பொறியாளர் நாகராஜ் குமார், நகர்மன்ற உறுப்பினர்கள் சிவகுமார், புல்லட் மணி, தங்கம், வெற்றி வேல், சாந்த ராஜ், செயற் பொறியாளர் நாகராஜ், உதவி செயற் பொறியாளர் சுரேஷ்குமார், இளம் மின் பொறியாளர் வெற்றி வேந்தன், தொ.மு.ச. ரவிச்சந்திரன், மாவட்ட சிறுபான்மையினர் அணி S.தாஹிர், பிரதிநிதி அழகுராஜா, துணை செயலாளர்கள் ஜோதி, தனபால், வேல்முருகன், செல்வராஜ், அந்தோணி, அருள்ஞானபிரகாசம், மணி, அருண் , ஆனந்த கண்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### "மோடி அரசு மாநில ஆளுநர்களை தவறாகப் பயன்படுத்துகிறது.." என்ற

# ராகுல் காந்தியின் குரலுக்கு நன்றி! முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

புதுடெல்லி, மே 23 -

**மோடி அரசு மாநில ஆளுநர்களை தவறாக பயன்படுத்துகிறது. இது கூட்டாட்சி மீதான ஆபத்தான தாக்குதல், இதனை எதிர்க்க வேண்டும் என்று மக்களவை எதிர்க் கட்சித் தலைவர் ராகுல் காந்தி அவர்கள், எட்டு மாநில முதலமைச்சர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கடிதம் எழுதியதை சுட்டிக்காட்டி சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார். இதற்கு நன்றி தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 'ராகுல் காந்தி அவர்களின் குரலுக்கு நன்றி' என்று தனது வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

மக்களவை எதிர்கட்சி தலைவரும், காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவருமான ராகுல் காந்தி தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:-

“இந்தியாவின் பலம் அதன் பன்முகத்தன்மையில் உள்ளது ஒவ்வொன்றும் அதன் சொந்தக் குரலைக் கொண்ட மாநிலங்களின் கூட்டுதான் ஒன்றியம்.



மோடி அரசாங்கம் மாநில ஆளுநர்களை தவறாகப் பயன்படுத்தி அந்தக் குரல்களை நசுக்கி, தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளைத் தடுத்து வருகிறது. இது கூட்டாட்சியின் மீதான ஆபத்தான தாக்குதல், இதை எதிர்க்க வேண்டும்” என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ராகுல் காந்தி அவர்கள், தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குடியரசுத் தலைவர் உச்சநீதிமன்றத்தில் 14 கேள்விகள் கேட்ட, விவகாரம் தொடர்பாக 8 மாநில முதல்மந்திரிகளுக்கு எழுதிய கடிதம் தொடர்பான பதிவையும் ராகுல் காந்தி, தனது எக்ஸ் வலைதள பதிவில் பகிர்ந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**நன்றி தெரிவித்து முதல்வர் பதிவு!**

இந்நிலையில், “இந்தியாவின் கூட்டாட்சி உணர்வை பாதுகாப்பதில் உங்கள் குரலுக்கு நன்றி” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

அன்புள்ள சகோதரர் ராகுல் காந்தி, மாநிலங்களின் உரிமைகளையும் இந்தியாவின் கூட்டாட்சி உணர்வையும் பாதுகாப்பதில் உங்கள் குரலுக்கு நன்றி

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி., தலைமையில்

# நீலகிரி மாவட்டக் கழக வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜு அறிவிப்பு!

நீலகிரி,மே.23-

2026ம் ஆண்டு சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து ஆலோசிக்க, நீலகிரி மாவட்ட திமுக வழக்கறிஞர் அணியின் நிர்வாகிகள் கூட்டம் திமுக சட்டத் துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி அவர்கள் தலைமையில் எதிர்வரும் 26.5.2025-திங்கட்கிழமை காலை 11 மணியளவில் மாவட்ட கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் நீலகிரி மாவட்ட கழக நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், கழக வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு மாவட்ட கழக பொறுப்பாளர் கே. எம்.ராஜு கேட்டுக்கொண்டார்.

# தென்காசி வடக்கு மாவட்ட அவைத் தலைவர் மற்றும் திருப்பத்தூர் மாவட்ட துணைச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புகளுக்கான தேர்தல் வேட்புமனுத் தாக்கல்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் தென்காசி வடக்கு மாவட்டக் கழகத் தேர்தலில், மாவட்ட அவைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட கோ. பத்மநாபன் அவர்கள் மறைவெய்திய காரணத்தாலும்; திருப்பத்தூர் மாவட்டம், பொதுக் குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட எஸ்.எம். ஷபீர் அஹமத் அவர்கள் ஆம்பூர் கிழக்கு நகர பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதாலும், திருப்பத்தூர் மாவட்ட மறு சீரமைக் கப்பட்டதால் நிரப்பப்படாமல் உள்ள துணைச் செயலாளர் ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புகளுக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து **2025, மே 26 (திங்கட் கிழமை) அன்று ரூ.25000/- வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.**

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் அந்தந்த மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்/ஒன்றிய/நகர செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி தலைமைக் கழகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள் : 22.5.2025

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் நேற்று முன்தினம் 21.05.2025 புதன்கிழமை அன்று தனது ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, மணலூர்பேட்டை பேரூராட்சியைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு கிரிக்கெட் பேட் கிட், வாலிபால் கிட் உள்ளிட்ட விளையாட்டு உபகரணங்களை வழங்கி, தனது வாழ்த்துக்களை தெரிவித்தார், இந்த நிகழ்வின் போது மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழகத் தோழர்கள், விளையாட்டு வீரர்கள், இளைஞர்கள் என அனைவரும் உடன் கலந்து கொண்டனர்.



விருதுநகர் வடக்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு அறிமுக கூட்டம் அமைச்சர் தங்கம் தென்னரசு ஆலோசனைப்படி மாநில அமைப்பாளர் டாக்டர் சுபேர் கான் தலைமையில் மாநிலத் துணை அமைப்பாளர் அன்வர் அலி, மாவட்ட அமைப்பாளர் பா. செல்லத்துரை முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு ஒன்றிய செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நகர, ஒன்றிய, பேரூர் அணி, நிர்வாகிகள் மற்றும் மாவட்ட தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.